பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

18 09 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. "ஒரே நாடு – ஒரே தேர்தல்" திட்டம் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

3. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற முதல்கட்டத் தேர்தலில் 59 சதவீத வாக்குகள் பதிவாயின.

4. புதிய குற்றவியல் சட்டத்தின்கீழ், ஐந்து லட்சத்து 56 ஆயிரம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. உலகக்கோப்பை ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் மற்றும் கீர்த்தனா பாண்டியன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>>

"ஒரே நாடு – ஒரே தேர்தல்" திட்டம் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இக்குழுவின் தலைவரான முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்திற்கு தமது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

முன்னதாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், விரிவான ஆலோசனைகளுக்கு பிறகே உயர்நிலைக்குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இரண்டு கட்டங்களாக இதனை செயல்படுத்த உயர்நிலைக்குழு பரிந்துரைத்துள்ளதாக அவர் கூறினார்.

முதல்கட்டமாக மக்களவைக்கும் - சட்டப்பேரவைக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்துவதற்கும், இரண்டாவது கட்டமாக பொதுத்தேர்தல் முடிவடைந்த 100 நாட்களில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்துவதற்கும் இக்குழு பரிந்துரைத்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அனைத்து தேர்தல்களுக்கும் பொதுவான வாக்காளர் பட்டியலை பயன்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுகுறித்து விரிவான விவாதம் மேற்கொள்ளப்படும் என்றும், இதனை செயல்படுத்துவதற்கென குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆலோசனைகளின்போது 80 சதவீதம் பேர் குறிப்பாக, இளையோர் இதற்கு ஆதரவு தெரிவித்ததாக அவர் கூறினார்.

உயர்நிலைக்குழு 101 நாட்கள் ஆய்வு மேற்கொண்டு 18 ஆயிரத்து 626 பக்க அறிக்கையை தாக்கல் செய்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதற்கிடையே, உயர்நிலைக்குழுவின் பரிந்துரையை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளதை வரவேற்றும், குறை கூறியும் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வரலாற்று சிறப்புமிக்க முடிவு இது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நேர்மையான நிதிச்சுமையற்ற தேர்தலை நடத்துவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதற்கும், வளங்களை ஆக்கப்பூவர்மாக பயன்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேவைப்படும்போது தேர்தலை நடத்துவதுதான் ஜனநாயகம் என்று தெரிவித்தார்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது என்பது ஜனநாய முறைக்கு எதிரானது என்றும் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டம் கூட்டாட்சி தத்துவத்தை வலுவிழக்க செய்திடும் என்று கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் கருத்து தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி ஆகியோர் மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

**<<<<<>>>>>**

பிரதமராக திரு நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற 100 நாட்களில் மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்

மத்திய அரசின் 100 நாட்கள் சாதனை குறித்து வெளியிட்டுள்ள காணொலியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 50 செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>**

சந்திரயான்-4 திட்டத்திற்கும், ககன்யான் விரிவாக்கத்திற்கும், வெள்ளி கோள் குறித்த ஆய்வுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அதிநவீன செயற்கைக்கோள் ஏவுதளத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விண்வெளித்துறையின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று **Space Kidz India** அமைப்பின் நிறுவனர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - ஸ்ரீமதி கேசன் - 47 செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்டத் தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்று முடிந்தது.

24 தொகுதிகளுக்கு நடைபெற்ற இந்த தேர்தலில் 59 சதவீத வாக்குகள் பதிவானதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

90 உறுப்பினர்களை கொண்ட ஜம்மு சட்டப்பேரவைக்கு மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.

இரண்டாவது கட்டத்தேர்தல் வரும் 25-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறும்

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 8-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்

**<<<<<>>>>>>**

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இதனை வெளியிட்டார்.

ஹரியானாவில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால், அனைத்து குடும்பங்களுக்கும் 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும், மகளிருக்கு மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்படும் உள்ளிட்ட ஏழு வாக்குறுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

**<<<<<>>>>>>**

புதிய குற்றவியல் சட்டத்தின்கீழ், ஐந்து லட்சத்து 56 ஆயிரம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

ஜூலை மாதம் ஒன்றாம் தேதிமுதல், செப்டம்பர் மாதம் 3-ஆம் தேதிவரை இவை பதிவு செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக 8 லட்சத்திற்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் மற்றும் கீர்த்தனா பாண்டியன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.
மங்கோலியாவின் **Ulaanbaatar**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அனுபமா ராமச்சந்திரன் - ஹாங்காங்கின் **Man Yan So**-வை வென்றார்.
கீர்த்தனா பாண்டியன் - இந்தியாவின் வித்யா பிள்ளையை வென்றார்.

----------------

காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.
ஃபிஜி-யில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 40 கிலோ எடைப்பிரிவில் **Jyoshna Sabar** –ம், 45 கிலோ எடைப்பிரிவில் **Akanksha Vyavahare** –ம், 49 கிலோ எடைப்பிரிவில் **Asmita Dhone** –ம், ஆடவர் 49 கிலோ எடைப்பிரிவில் **Babulal Hembrom-**ம் தங்கப்பதக்கம் வென்றனர்.
மகளிர் 59 கிலோ எடைப்பிரிவில் **Mina Santa** –வும், ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் **Maharajan** –னும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

------------------

மலேசியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மான்சி சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 22-24, 21-10 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Tasya Farahnailah** –ஐ வென்றார்.

***<<<<<END>>>>>>***